# தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற மேட்டுப்பாளையம் பிரச்சாரக் கூட்டத்தில் எதிரிகளை மிரளச் செய்த மக்கள் திரள்!



## ‘கருப்புச் சட்டை அணிந்து கருப்புக் கொடியேற்றினால் தொகுதி மறுவரையறை நின்றுவிடுமா?’ எனக்கேட்டு சிரித்த

# பழனிசாமி கும்பலைப் பார்த்து இந்தியாவே சிரிக்கிறது!

### மேட்டுப்பாளையம் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி!



**மேட்டுப்பாளையம்,ஏப். 20 -**

**ஆட்டோ ஓட்டும் மாணிக்கம் போல் அமைதியாகத் தேர்தல் வேலை பார்த்துக் கொண்டிருந்த எங்களை, பழைய திமுக என்ற பாட்ஷாவாக மாற வைத்துவிட்டது பா.ஜ.க. எனவும் ‘கருப்புச் சட்டை அணிந்து கருப்புக் கொடி ஏற்றினால் தொகுதி மறுவரையறை நின்றுவிடுமா?’ எனக் கேட்டுச் சிரித்த ‘பழனிசாமி கும்பலைப் பார்த்து இன்றைக்கு இந்தியாவே சிரிக்கிறது!** எனவும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.04.2026) மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.**



### மாநில உரிமைக்கு துணைநின்ற தேஜஸ்வி – அகிலேசுக்கு நன்றிகள்!

**இங்கு எனக்கு முன்பு, பீகாரின் இளஞ்சிங்கம் – ‘Young Lion of Bihar’ என் இனிய சகோதரர் தேஜஸ்வி யாதவ் அவர்கள் பேசினார். வட மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தொகுதி மறுவரையறை என்பது முழுக்க முழுக்க பா.ஜ.க. என்ற ஒரு கட்சிக்குச் சாதகமான சட்டம் என உணர்ந்து, இவருடைய R.J.D. கட்சியும், ‘உத்தரப் பிரதேசத்தின் ஒளி விளக்கு’ சகோதரர் அகிலேஷின் சமாஜ்வாதி கட்சியும் அந்தச் சட்டத்தை எதிர்த்திருக்கிறார்கள்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

“வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும், அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உன்னைச் சேரும்”! “வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும், அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் தமிழ்நாட்டு மக்களான உங்களையே சேரும்” என்று மகிழ்ச்சியாக நான் பாடும் அளவிற்கு, நேற்று மிகப்பெரிய வெற்றிச் செய்தியைப் பெற்ற மகிழ்ச்சியோடு கம்பீரமாக இந்த மேட்டுப்பாளையத்திற்கு வந்திருக்கிறேன்.

### மாநில உரிமைக்கு துணைநின்ற தேஜஸ்வி - அகிலேசுக்கு நன்றிகள்!

நேற்று கொடைக்கானல் இருக்கும் திண்டுக்கல்லுக்குச் சென்றுவிட்டு, இன்றைக்கு மலைகளின் அரசியான ஊட்டி இருக்கும் நீலகிரி மாவட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவு கேட்டு வந்திருக்கிறேன். கோவை மாவட்டத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கும் சேர்த்தே ஆதரவு கேட்க வந்திருக்கிறேன்.

இங்கு எனக்கு முன்பு, பீகாரின் இளஞ்சிங்கம் - ‘Young Lion of Bihar’ என் இனிய சகோதரர் தேஜஸ்வி யாதவ் அவர்கள் பேசினார். வடமாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தொகுதி மறுவரையறை என்பது முழுக்க முழுக்க பா.ஜ.க. என்ற ஒரு கட்சிக்குச் சாதகமான சட்டம் என உணர்ந்து, இவருடைய R.J.D. கட்சியும், ‘உத்தரப் பிரதேசத்தின் ஒளிவிளக்கு’ சகோதரர் அகிலேஷின் சமாஜ்வாதி கட்சியும் அந்தச் சட்டத்தை எதிர்த்திருக்கிறார்கள்.

### எந்த மாநிலமாக இருந்தாலும் உழைக்கும் தொழிலாளர்களை காப்போம்!

இது சாதாரண விஷயம் அல்ல; தேச நலன் மற்றும் மாநில உரிமைகளுக்காக தங்களது தந்தைகளின் வழியில், முதிர்ச்சியோடு, பக்குவத்தோடு செயல்பட்டிருக்கிறார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்கள் சார்பாக, இங்கு வந்திருக்கும் உங்கள் அனைவரின் சார்பில், சகோதரர் தேஜஸ்வி அவர்களுக்கும், அகிலேஷ் அவர்களுக்கும், இந்த நேரத்திலே நீங்கள் எல்லாம் எழுந்து நின்று கை அசைத்து நன்றியை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தேஜஸ்வி அவர்கள் பேசும்போது, திருப்பூர், கோவை, ஈரோடு, சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் தொழில் நகரங்களிலே நமது வடமாநில சகோதரர்கள் மரியாதையோடும், பாதுகாப்போடும் பணி செய்வதைப் பற்றி அவர் குறிப்பிட்டுச் சொன்னார். எந்த மாநிலத்தவராக இருந்தாலும் சரி, தமிழ்நாடு வந்தாரை வாழவைக்கும்! தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகவும், உட்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் உழைக்கும் தொழிலாளர் தோழர்களை எப்போதுமே நாங்கள் நன்றாகப் பாதுகாப்போம்!

இப்போது உங்கள் அனுமதியோடு நம்முடைய வெற்றி வேட்பாளர்களை நான் அறிமுகப் படுத்தப் போகிறேன்.

முதலில், குன்னூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கே.எம். ராஜு அவர்கள். நாற்பது ஆண்டுகளாகக் கழகத்துக்கு உழைக்கும் உண்மைத் தொண்டர். ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து, இப்போது மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார். அவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்பி வைக்க, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி. ராமச்சந்திரன் அவர்கள். உதகை ஊராட்சி ஒன்றியத் தலைவராகப் பணியாற்றி, சிறந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் எனச் சான்றிதழ் பெற்றவர். காங்கிரஸ் கட்சியின் உதகை வட்டாரத் தலைவரான அவருக்கு, நீங்கள் எல்லாம் கை சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, கூடலூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மு. திராவிடமணி அவர்கள். பத்தாண்டு காலம் கூடலூர் சட்டமன்ற உறுப்பினராகச் சிறப்பாகப் பணி ஆற்றியவர். பல்வேறு நலத்திட்டங்களை அந்தத் தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார். மூன்றாவது முறையாகப் போட்டியிடுகிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்குகளை வழங்கிட வேண்டும்.

### உங்கள் வெற்றிச் சின்னமான உதய சூரியனை மறவாதீர்!

அடுத்து, மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் அவர்கள். வடக்கு ஒன்றியச் செயலாளர் கல்யாணசுந்தரம் அவர்களின் துணைவியார். தடகளம், கைப்பந்து உள்ளிட்ட விளையாட்டுகளில் சிறந்த வீராங்கனை. மக்களுக்காக பணியாற்ற வந்திருக்கும் சகோதரி கவிதா அவர்களுக்கு, நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் என்.ஆர். கார்த்திகேயன் அவர்கள். நரசிபுரம் ஊராட்சித் தலைவராக இருந்தவர். 2010-ஆம் ஆண்டு சிறந்த ஊராட்சிக்கான உத்தமர் காந்தி விருதைப் பெற்றவர். தி.மு.க. மாவட்டப் பிரதிநிதியான இவருக்கு, நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.பி. சூரியபிரகாஷ் அவர்கள். கோவை மாநகராட்சி இளைஞர் காங்கிரஸ் பொறுப்பாளராக - மண்டல சமூக வலைத்தளப் பொறுப்பாளராக இருந்து, சிறப்போடு தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநிலத் தலைவராக உயர்ந்திருக்கிறார். அவருக்குக் கை சின்னத்தில் நீங்கள் ஆதரவு தந்திட வேண்டும்.

இவர்கள் அனைவரின் வெற்றியும் உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! வேட்பாளர்கள் உட்காரலாம்! உங்களுக்கு வெற்றி உறுதியாகிவிட்டது. சீட் கன்ஃபார்ம்!

### கோவை - நீலகிரிக்கு நிறைவேற்றிய திட்டங்கள்!

கோவை மாவட்டத்துக்கு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் செய்திருக்கும் பணிகளை, இதற்கு முன்பே நான் பல்வேறு கூட்டங்களில் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். அதனால் நீலகிரிக்குச் செய்த பணிகளை நான் முதலில் சொல்ல விரும்புகிறேன்.

உங்களுக்கே தெரியும்… நீலகிரிக்கு அடிக்கடி மலர்க் கண்காட்சி தொடங்கி வைக்க நான் வந்திருக்கிறேன்.

குழந்தைகளுக்கான “ஊட்டச்சத்தை உறுதி செய்” முகாம்களைத் தொடங்கி வைக்க முத்தோரை பகுதிக்கு வந்தேன்.

ஜான் சுல்லிவன் சிலை திறப்பு,

தெப்பக்காடு யானைகள் முகாமில் யானை பாகர்கள் குடியிருப்புத் திறப்பு எனப் பல நிகழ்ச்சிகளுக்கு வந்திருக்கிறேன்.

இங்கே வரும்போதெல்லாம் தோடர்கள், படுகர்கள், இருளர்கள் எனப் பழங்குடியின மக்களைச் சந்தித்து, அவர்களின் தேவைகளை எல்லாம் நான் தீர்த்துக் கொடுத்திருக்கிறேன்.

அந்த வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக கூடலூரில் மனித விலங்கு மோதலைத் தடுக்க, யானைகள் கிராமப் பகுதிக்குள் நுழைவதைக் கண்டறியும் வகையில் 24 மணி நேரமும் செயல்படும் அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டு, கண்காணிப்புப் பணி பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

### வனத்துறைக்கு 32 பாதுகாப்பு வாகனங்கள்!

யானை, புலி உள்ளிட்ட வனவிலங்குகள் ஊருக்குள் வருவதைத் தடுக்க வனத்துறையினருக்கு 32 வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

37 கோடி மதிப்பீட்டில் சுகாதார மையங்கள்.

768 பழங்குடியினர் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

குன்னூரில் புதிய அரசுக் கல்லூரி.

நீலகிரி பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலை.

அதிநவீன தொழில்நுட்ப மருத்துவக் கருவிகளோடு 143 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த அரசு மருத்துவக் கல்லூரி கட்டடம். மலைப்பகுதியில் இதைக் கட்டி முடித்ததே பெரும் சவாலான காரியம். அதை நாம் செய்திருக்கிறோம்.

நீலகிரியில் காட்டேரியிலிருந்து காந்திபேட்டை வரைக்கும் மாற்றுப் பாதை சாலை.

நீலகிரி வரையாடு திட்டம்.

முதுமலைப் புலிகள் காப்பகம்.

கூடலூரில் மருத்துவமனை அமைக்க நிதி ஒதுக்கீடு.

பத்தாண்டு காலமாக அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையான போனஸ்கூட வழங்கப்படாத நிலையில், திராவிட மாடலில் ஆட்சியில் 105 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 பர்செண்ட் போனஸ்.

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு.

ஓய்வு பெற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன.

தொடர்ச்சி 8 –ஆம் பக்கம்